1987 ஏப்ரல் 27]

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 8—12—1986 ஆம் நாளிட்ட 1243 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

83. பூந்தமல்லி, ஊரக வேலைவாய்ப்புத் திட்ட சங்கத்தினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18—12—1986 ஆம் நாளிட்ட 1297 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

84. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் (பத்தாவது திருத்த) சட்டத்தின் வழிவகைகள் நடைமுறைக்கு வரும் தேதியினை அறிவிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1322 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

85. தூத்துக்குடி அல்காலி இரசாயனம் மற்றும் உரத் தொழிற் சாலைக்கு 'ஸ்பிக்' நிறுவனத்தாரால் விற்கப்படும் அம்மோனியா வாயுவிற்கு விதிக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக் களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 29—12—1986 ஆம் நாளிட்ட 1323 ஆம் எண் அரசா ணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

86. 1982-83 ஆம் ஆண்டிற்கான கோழியின வளர்ச்சிக் கழகத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறு வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]. (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

187. தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில் களும், சிறு தொழில்களும்), 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

188. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

189. 1986-87 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி இயக்குனரகம் பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ், ஆங்கிலம்).

190. 'தமிழகத்தில் தொழில் கூட்டுறவு வளர்ச்சி' என்கிற புத்தகம். (தமிழ்).

191. 'சிறு தொழில்களுக்கு சிட்கோவின் பெரும் உதவி' என்கிற புத்தகம் (ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS